பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 25 சனிக்கிழமை 08.03.2025 கதிர் 120

## இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவின் அல்ஜெசீரா நேர்காணல் சமூக ஊடகங்களில் பெரும் வைரலாகப் பரவி வந்தது. தமிழர்கள் மத்தியில் மட்டமன்றி ☞2

# ஞானசார தேரரின் கருத்து மீது உரிய விசாரணைகள் தேவை

### பிரஜைகள் அமைப்பு வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குலுடன் தொடர்புடைய பல விடயங்களை தாம் அறிந்திருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்த கருத்து தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால்நேற்றுமுறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய பல விடயங்களை தாம் அறிந் திருப்பதாக அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப் பின்போது பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த விடயங்களை ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்குதாம் வெளிப்படுத்த தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பு நேற்று இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தது. ☞7

# சாதாரண தரப் பரீட்சை மார்ச் 17 தொடங்குகிறது

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை (2024 கல்வியாண்டுக்கான) மார்ச் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 3663 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டு 474,147 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபால் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதி ☞7

# ஜப்பானுடன் ஒப்பந்தம்

வெளிநாட்டு கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாடு குறித்த இருதரப்பு ஒப்பந்தத்தில் வெள்ளிக்கிழமை (07) இருநாடுகளும் கைச்சாத்திட்டன.

கொழும்பில் அமைந்துள்ள நிதியமைச்சில் இன்றையதினம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜப்பான் அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கான அந்நாட்டு தூதுவர் அகியோ இஸோமாட்டா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டிருக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு, இருதரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் ஊடாக ஜப்பானுடனான கடன்மறுசீரமைப்பு செயன்முறையை இலங்கை ☞7

# இராணுவத்தினரின் பிடியிலிருந்து துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

மாவீரர்களுடைய உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவு கூருவதற்காக, வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர்துயிலும் இல்லங் களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்துரைராசா ரவிகரன்அமைச்சரும், நாடாளுமன்ற சபைமுதல்வருமானவிமல்ரத்நாயக்க



அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025ஆம் ☞2

# கட்டுப்பணம் செலுத்தியோர் விவரங்கள்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இதுவரை கட்டுப்பணம் செலுத்திய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் குறித்து தேர்தல் ஆணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ☞7

# பொருளாதார மறுமலர்ச்சிக்கு பெண்களின் ஆதரவு தேவை

### ஜனாதிபதியின் மகளிர் தின வாழ்த்து

பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கும் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குமான தமது பயணத்தில் முழுமையான பெண்கள் தலைமுறையினரின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள சர்வதேச மகளிர் தின வாழ்த்துச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேசமகளிர்தினம்என்பது பெண்களின்உரிமைகளுக்கான செயற்பாட்டிற்குக் கிடைத்த ☞7

# பிரதமரின் மகளிர் தின வாழ்த்து

பெண்களின் வாழ்வு செழிப்புறும்போது சமூகங்கள் செழிப்புற்று விழங்கும். பெண்கள் தலைமையேற்கும்போதுதேசங்களில் சிறந்த மாற்றத்தினை எதிர்பார்க்க முடியும். இந்த சர்வதேச மகளிர் தினத்தில் நாம் சொற்களுக்குள் கட்டுண்டிருக்காது ஒன்றுபட்டு முன்னேறுவோம். நமக்குமுன்னுள்ள தலைமுறைக்காகவும் இன்று போராடுகின்றவர்களுக்காகவும் எதிர்கால தலைமுறைக்காகவும் உண்மையானநீடித்தமாற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள சர்வதேச மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ☞7

# துறைமுக அதிகார சபையிடமிருந்து 1,800 ஏக்கரை விடுவிக்கவேண்டும்

### குகதாசன் எம்.பி. வலியுறுத்து

இலங்கைத் துறைமுக அதிகார சபையானது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் 5,226 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி



வைத்துள்ளது உள்ளது. இதில் 1882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றார்கள். துறைமுக அதிகார சபையிடம் இருந்து அதை விடுவிக்க வேண்டுமென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மற்றும் நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி ☞2

# சஜித்தின் வாழ்த்து

பெண்ணின் திறமைகளுக்கும் ஆற்றலுக்கும் தகுந்த இடமளித்து, வீட்டிலும், வெளியிலும், தொழில் புரியும் இடத்திலும் அவரைப் பாதுகாத்து, அவரது உரிமைகளை நிலைநிறுத்தி, நாட்டுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்ற தேவையான வழிகளை திறந்துவிட வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சர்வதேசமகளிர்தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :

ஒரு தாய், மனைவி, சகோதரி, மகள் மற்றும் நண்பி போன்ற பல்வேறு வகிபாகங்களின் பிரதிநிதியாக இருக்கும் பெண், ஒரு நாட்டின், சமூகத்தின் முக்கிய இயக்க சக்தியாகவும் உயிர்நாடியாகவும் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சிங்களவர்களிடமும் அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

நாடாளுமன்றத்திலும் இந்த விவகாரம் நேற்று எதிரொலித்தது. சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்கதான் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் இழுத்தார். கவலையான செய்தி ஒன்றை தெரிவிப்பதாகசபையில்குறிப்பிட்டுஅவர்பேசத் தொடங்கியபோது மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழப்பமடைந்தனர். எனினும் பின்னர் அவர் கூறிய விடயத்தைப் புரிந்துகொண்டதும் வாய்விட்டுச் சிரித்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் போக்குவரத்து அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றத் தொடங்கிய அமைச்சர், மிகவும் கவலையான செய்தியுடனேயே விவாதத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளது என்றார். சபையில் இருந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும்ஏதோவொருகவலையான செய்தியொன்றையே அவர் கூறப்போகின்றார் என்று அவர் கூறுவதை உன்னிப்பாகக் கேட்டனர்.

அதன்போது அவர், ''அண்மையில் இடம்பெற்ற பெரிய வாகன விபத்தொன்று தொடர்பில்இங்கேஅறிவிக்கவேண்டியுள்ளது" என்றார். எல்லோரும் இன்னும் நன்றாக அவரது பேச்சை செவிமடுத்தனர். ''பெராரி வாகன ஓட்டுநர் உரிமம் இருப்பதாக கூறியவர் அல்ஜசீராவுடன் மோதி சேதத்திற்கு உள்ளாகியுள்ளார்'' என்று அமைச்சர் திடீரென்று அறிவித்தார்.

''அவரின் மூளைக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அவர் இந்தத் தினங்களில் பல்வேறு கதைகளை கூறுகின்றார். போக்குவரத்து அமைச்சு மீதான விவாதம் நடக்கும்இந்தநேரத்தில்பெராரிவாகனஓட்டுநர் உரிமம் இருப்பதாக கூறியவருக்கு எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம்" என்றார் அமைச்சர்.

முதலில் அமைச்சர் எதைப் பற்றிக் கூறுகின்றார் என்று புரியாதபோதும், அவரது சிலேடையைப் புரிந்துகொண்டதும் விழுந்து விழுந்து சிரித்தனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத்தான் அமைச்சர் இப்படிச் சிலேடையாகக் கூறியிருந்தார். அதற்கொரு காரணம் உள்ளது. அண்மையில் ஊடகங்களை சந்தித்த வேளையில், நீங்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்வீர்களா? என்ற கேள்விக்கு பதிலளித்த ரணில், ''பெராரி உரிமம் உள்ள ஒருவர், 'எல்' போட் உள்ளவர்களுடன் நேரத்தை செலவிடுவதில்லை" என்று தெரிவித்திருந்தார். அதாவது தான் 'பெராரி' போன்ற விலை கூடிய கார்களை ஓட்டக்கூடியவன், அனுபவஸ்தன், கற்றுக்குட்டிகளுடன் எல்லாம் போட்டியிடமுடியாது என்று கருதியிருந்தார்.

அதனால்தான் பெராரி வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தவர் (ரணில்) அல்ஜெசீராவுடன் மோதி விபத்துக்குள்ளானார் என்று அமைச்சர் எள்ளி நகையாடினார். இதேபோன்ற நக்கல், எள்ளல்களை முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களிலும் அதிகம் காணமுடிகிறது.

அப்படி சமூக வலைத்தளங்களில் பார்த்த கருத்துக்களில் வித்தியாசமாகப் பட்ட ஒன்றை இங்கே உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன். இது இதனை எழுதியவருடைய தனிப்பட்ட கருத்து. எனினும் அதிலுள்ள சில நியாயங்களையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பின்னரான, மிகவும் ஆளுமையுள்ள சிங்களத் தலைவர் ரணில்!

சந்தேகமா? ரணிலின் இந்த இடத்தில் மகிந்தவையோ இன்னொருதலைவரையோ உட்காரவைத்திருந்தால்என்னவாகியிருக்கும் என நினைக்கிறீர்கள்?

னிளஜு-ஷ் கூிழிவிழிஜ உடனான அல்ஜெஸீரா நேர்காணல் கிட்டத்தட்ட ஐம்பது நிமிடங்கள் நீடித்த - மிகவும் ஷ்ஜமிளஜவிள ஆன, நேரமெடுத்து யோசித்து பதில் சொல்ல முடியாத வகையிலான, உடனடி நேரடிப் பதில்களை கேட்டு நின்ற நேர்காணல்.

அதுமட்டுமல்லாது, ரணிலின் ஐம்பத்தி ஐந்து வருடகால அரசியல் வாழ்க்கையில் சந்தித்த மிக நெருக்கடியான நேர்காணலும் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

அல்ஜெஸீராஎன்கிறசர்வதேசபுகழ்வாய்ந்த ஊடகத்தின் முன் நின்று- மெஹ்தி ஹஸன் என்கின்ற புகழ்பெற்ற ஊடகவியலாளரினை முகம்கொடுத்து,

கொடுக்கப்படும் ஒவ்வொரு பதில்களும் இலங்கையையும்- இலங்கை சிங்கள பவுத்த அரசுகளையும், கடந்தகால- இக்கால அரசுகளை சங்கடத்துக்குள் - பிரச்சனைக்குள் தள்ளக்கூடும் என்று தெரிந்துகொண்டு,

தொடுக்கப்பட்ட ஒவ்வொரு உக்கிரமான கேள்விகளுக்கும்

நேரடிப் பதில்களைக் கொடுக்காமல்,

எதனையும் ஒப்புக்கொள்ளாமல்,

எந்தப் பொறியிலும் தானும் தன் அரசும் தன் நாடும் விழுந்துவிழாமல்

மிகக்கச்சிதமாக தன்னை ஒரு பொய்யராக - நேர்மையற்றவனாக - மக்கள் விரோதியாக காட்டி, மொத்தப் பழியையும் தன் மேல் போட்டுவிட்டு,

பேரினவாத கடந்த - நிகழ்கால அரசுகளையும்,தன்அரசியல்தோழர்களையும், நாட்டையும்திறமையாககாப்பாற்றியிருக்கிறார் பிறவிஅரசியல்ராஜதந்திரிரணில்விக்கிரமசிங்க!

கவனமாகப் பாருங்கள்- இதுவரை அரசியல் வெளியில் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மைகளைமட்டுமேஇந்தநேர்காணலில் ரணில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஏனையஅனைத்துக்குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொள்ளவே இல்லை! அதற்கான ழிஉஉலிற்ஜமிழிஞுஷ்யிஷ்மிதீ யை தொடக்கூட இல்லை. ஞூ ழிது உயிளழிஜ என்பதை தொடர்ந்தும் மெய்ண்டெய்ன் செய்துகொண்டேயிருந்தார்!

அதுமட்டுமல்லாது இலங்கை அரசின் அத்தனை குற்றங்களையும் முடிந்தளவு சாக்குப்போக்குச் சொல்லி மடைமாற்றியவண்ணமிருந்தார்.

மெஹ்தி ஹஸன் அழைத்து வந்திருந்த அவர் சார்பு பார்வையாளர்களின் இகழ்ச்சிச் சிரிப்புகளையும் தலைக்குள் ஏற்றாமல், நிலை தவறாது ஐம்பது நிமிடங்களை நெருப்பாற்றில் கடந்து முடித்திருப்பது

சிங்களவர்களுக்கு இதுவரைகாலும் கிடைத்த ஒப்பற்ற அரசியல் ராஜதந்திரி ரணில் என்கின்ற ஆளுமையின் திறமையே!

சர்வதேச மட்டத்தில் பதில் சொல்ல முடியாவிட்டாலும்கூட, தன்னை அடைமானம் வைத்து நாட்டை காப்பாற்றியிருக்கிறார் - இது பெரும்பான்மைக்கு கிடைத்த ஒப்பற்ற வரமில்லையா?

ஹஸன் அழைத்துவந்த மூன்று பேச்சாளர்களில் ப்ரான்ஸிஸ் ஹரிஸன் மட்டும் காத்திரமாக பேசியிருந்தார். மதுராவும் டேவிட்டும் நேர்காணலின் கனத்தை உணர முடியாமல் பேசினார்கள்.

ரணிலை வைத்து செய்துவிட்டார் ஹஸன் என்று பலரும் ரணிலின் மேலான கோபத்தை / கடுப்பை கொண்டாடுகிறார்கள் - அது சிற்றின்பமே!

ரணில் மீண்டுமொருமுறை நம் அனைவரையும் தன் ராஜதந்திரத்தால் (வெல்லமுடியாமல் நீங்கள் சொல்லும் நரித்தனத்தால்) தோற்கடித்திருக்கிறார் என்பதுதான் கசப்பான உண்மை!

இதனை எழுதியிருப்பவர் மைந்தன் சிவா என்ற முகநூலுக்குச் சொந்தக்காரர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இராணுவத்தினின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும்சிவில்விமானசேவைகள்அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதேநாடாளுமன்றஉறுப்பினர் ரவிகரன், அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் இக்கோரிக்கையைவிசேடமாகமுன்வைத்தார்.

இதன்போதுஅவர்மேலும்தெரிவித்ததாவது:

இறந்தவர்களைநினைவுகூருதலென்பது அங்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும்.

எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நினைவுநாளாக நவம்பர்-27 அன்று துயிலுமில்லங்களிலும், மே-18அன்று முள்ளிவாய்க்காலிலும் நினைவு கூருவார்கள்.கடந்தவருடம் உங்களுடைய ஆட்சியில்தடைஇல்லாமல்உணர்வுபூர்வமாக நவம்பர் 27 நாளினை நிம்மதியாக நினைவு கூர்ந்தார்கள்.

துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணவத்தினர் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கில் அதிகமாகவும், முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒருபடையினர் என்று உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒருசெட்டுக்கண்ணீர் சிந்தி, தமது மனத்தை ஆறுதல் படுத்துவதற்கு, இராணுவம் அத்துமீறி கையகப்படுத்திவைத்துள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில்,ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள இன்னும்சில துயிலுமில்லங்களையும் விடுவியுங்கள். வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் சார்பாக இந்தக்கோரிக்கையினைமுன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

# மலையகத் தமிழ் மக்களுக்கு காணி உரிமையே வேண்டும்

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்து

வீட்டை வைத்து மலையகத்தில் அரசியல் செய்ய முடியாது. அவர்களுக்கு காணி உரிமையே வழங்க வேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பை நாங்கள் வழங்குவோம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்பொதுச்செயலாளரும்,நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுஉரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் போக்குவரத்தில் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்று பிரதமர் கூறியிருந்தார். இந்நிலையில் ஹட்டனில் சம்பவமொன்று நடந்துள்ளது. அதாவதுநுவரெலியாமாவட்டத்தில்பாடசாலை பிள்ளைகள் இ.போ.ச பஸ் ஒன்றில் ஏறியபோது பஸ் நடத்துனர் தவறான சொற்களை பயன்படுத்தி அவர்களை பலவந்தமாகக் கீழே இறக்கியுள்ளார்.

இது என்னுடைய பஸ், இதில் யாரை உள்ளேவைத்திருப்பதுஇறக்குவதுஎன்பதனை நானே தீர்மானிப்பேன் என்று நடத்துநர் கூறியுள்ளார். 50 வருடங்களுக்கு முன்னர் இனவாதம் தலைத்தூக்கியிருந்தபோது இதேபோன்றே எந்த தவறும் செய்யாத மலையக மக்களை நடத்தினர். இதனை மீண்டும் செய்வது பிரச்சினைக்குரியதாகும். அதனால் குறித்த நடத்துனர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தில் நடத்துநரை சேவையில் இருந்து இடைநிறுத்துவதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. அது நிரந்தரமானதாக இருக்கவேண்டும். இடைநிறுத்திவிட்டு 6 மாதங்களில் மீண்டும் உள்ளே கொண்டுவருவர். அதனால் இதனைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

மேலும் நான் நீர்வழங்கல் அமைச்சில் இருந்தபோது நாங்கள் 6000 மில்லியன் லாபத்தைகாட்டியுள்ளோம்.அதன்படிமுன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கையொன்றை விடுத்து மலையக மக்களுக்காக அபிவிருத்தி நிதியை ஒதுக்குமாறு கோரியிருந்தோம். அதன்படி வீதி அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அந்த நிதி மூலம் பொகவந்தலாவ, நோர்வூட், கொட்டகலை, நாகசேனை ஆகிய இடங்களில் வீதி அபிவிருத்திகளைச் செய்துள்ளோம். எவ்வாறாயினும் 294 கிலோ மீற்றர் வீதிகள் சீரமைக்கப்படாது உள்ளன. இந்த பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

அத்தோடு வீட்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் அமைச்சு ரீதியில் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்காக 387 வீடுகளுக்கான திட்டமே உள்ளன. மலையகத்தில் 2 இலட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் வீடுகள் இன்றி இருக்கின்றன. இந்திய அரசால் ஏற்கனவே நான்காயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் 10 ஆயிரம் வீடுகள் வரவுள்ளன. எவ்வளவு வாய்சொல் வீரர்களாக இருந்தாலும் வீட்டுப் பிரச்சினை தீரப்போவதில்லை.

மலையக மக்களுக்காக 10 பேர்ச்சர்ஸ் என்ற அடிப்படையில் குடும்பமொன்றுக்கு காணியை வழங்கினால் 4,777 ஹெக்டேயர் மட்டுமே போகும். அங்கு இரண்டு இலட்சத்து நான்காயிரம் ஹெக்டேயர் காணி உண்டு. காணி உரிமையே மக்களுக்கு அத்தியாவசிய தேவையாகும். சலுகை அரசியல் மலையக மக்களை மாற்றப் போவதில்லை. மாற்றம் தேவையென்றால் கட்டாயம் காணி உரிமையை வழங்கியே ஆக வேண்டும்.

காணியை அவர்களிடம் ஒப்படைத்தால் அவர்களால் சொந்த வீட்டைக் கட்ட முடியும். நாடளாவிய ரீதியில் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. ஏன் மலையக மக்களுக்கு அதனை வழங்க முடியாது. வீட்டை வைத்து அரசியல் செய்ய முடியாது. அவர்களுக்கு காணி உரிமையையே வழங்க வேண்டும். அதற்கு தேவையான ஒத்துழைப்பை நாங்கள் வழங்குவோம். நாங்கள் மூன்று முறை அதுதொடர்பில் அமைச்சரவையில் அனுமதி பெற்றுள்ளோம் அதனை செயற்படுத்தவே வேண்டியுள்ளது என்றார்.

## துறைமுக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் மாகாண மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் வரும் முதன்மையான வீதிகள் உள்ளக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. எனவே இதனை மறுசீரமைக்க வேண்டும்.திருகோணமலை மாவட்டத்தில் பாலங்களும் பழுதடைந்துள்ளன. இவை நீண்ட காலத்துக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும்.எடுத்துக்காட்டாகமூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் கட்டைபறிச்சான் பாலம் ( கருப்பு பாலம் ) மற்றும் இறால் பாலம் என்பன முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றைச் சீரமைக்காவிட்டால் உயிர்ச்சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைப் புதிதாக அமைக்க வேண்டும்.

அதேபோன்று வெருகல் பிரதேசத்தில், ஏரிக்கும் கடலுக்கும் இடையில் சுமார் 5000 மக்கள் வாழ்கின்றனர். பேரிடர் காலங்களில், மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கி மரணத்தை சந்திக்கக் கூடிய வாய்ப்பு உண்டு . இவ்வாறான விளைவுகளைத் தடுக்க ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும்.திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையில் கொக்கிளாய் ஏரி உள்ளது.

இது ஓர் ஆழமற்ற ஏரி . புல்மோட்டையில் வாழும் மக்கள் கொக்கிளாய் ஏரி வழியாக 32 கிலோமீட்டர் பயணித்தால் முல்லைத்தீவை சென்றடையலாம். பாலம் இல்லாததால் மக்கள் வவுனியா வரை சுற்றிச் சென்று 75 கிலோ மீற்றர் அதிகமாக பயணித்து முல்லைத்தீவுக்கு செல்ல வேண்டியுள்ளது. இது பணச் செலவையும் நேரச் செலவையும் ஏற்படுத்துகிறது. எனவே கொக்கிளாய் ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் முதன்மையானவளமாககாணப்படுவதுஅதன் இயற்கைதுறைமுகம். ஆனால்சுதந்திரத்திற்கு பின் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புகள் இந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டவில்லை.திருகோணமலை துறைமுகத்தின் உள்ளே 4 இறங்கு துறைகள் உள்ளன . அவற்றில் ஒன்று அஷ்ரப் இறங்கு துறை.இது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எஞ்சிய மூன்று இறங்கு துறைகளில் ஒன்றை பிறிமா மா ஆலையும் மற்றொன்றை டோக்கியோ சீமேந்து ஆலையும் பிறிதொன்றை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனமும் பயன்படுத்துகின்றன.

அஸ்ரப் இறங்கு துறையில் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுடன் மாத்திரம் இன்றுவரை ஆளணிப் பற்றாக்குறை , போதிய கப்பல் தரிப்பிடவசதியின்மைபோதியசரக்குகளஞ்சிய வசதியின்மை சரக்கு ஏற்றி இறக்கும் கனரக இயந்திரங்கள் இன்மை, முறையான வாகன ஓடுதளம் இன்மை என்ற குறைபாடுகளோடு காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்கு வரக்கூடிய கடற்கலங்களுக்கு சிறந்த சேவை கிடைப்பதில்லை.

இதனால் அவை வேறு துறைமுகங்களை நாடிச்செல்கின்றன. இதன்விளைவாகநமக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. துறைமுகத்தில் உள்ள குறைபாடுகளை சீர் செய்வதன் மூலம் கணிசமான அந்நிய நாணயமாற்று வருவாய்யை ஈட்டமுடியும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# காங்கேசன்துறை சீமெந்து ஆலைப்பகுதியில் அமைச்சர்கள் குழுவினர் நேற்று களப்பார்வை

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலைக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) அமைச்சர் குழாம் நேரில் விஜயம் மேற்கொண்டு, தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.







கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணநாதன் இளங்குமரன், எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, யாழ். மாவட்ட செயலாளர் பிரதீபன், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் சீமேந்து தொழிற்சாலையை பார்வையிட்டனர்.

1950 களில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை போர் காரணமாக 1990 களில் மூடப்பட்டது. அன்று தொடக்கம்கடந்த35வருடகாலமாக தற்போதுவரையில் இயங்கா நிலையில் காணப்படுகிறது.

மீண்டும் தொழிற்சாலையை, சீமெந்து உற்பத்திக்கென ஆரம்பிப்பதற்கு பல சவால்கள் உள்ள நிலையில் இன்று அமைச்சர் குழாம் நேரில் சென்று அவை தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

சீமெந்து தொழிற்சாலையாக அல்லாமல், வடக்குக்கு பொருளாதார பலன் தரக்கூடிய வேறுதிட்டங்களை இங்கு செயல்படுத்தலாமா? என்பது பற்றியும் அதன் போது கலந்துரையாடப்பட்டது.

உரிய ஆய்வுகள், கலந்துரையாடல்களின் பின்னர், மக்களுக்கு பலனளிக்கும் வகையில் இறுதி தீர்மானம் எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டது.

# மூதூர் பொலிஸாரினால் கணவன்மீது தாக்குதல்

## மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மூதூர் பொலிஸாரால் கணவன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு நீதி கோரி பாதிக்கப்பட்டவரின் மனைவியால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த லிங்கேஸ்வரன் முனீஸ்வரி என்பவரால் நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் குறித்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் -

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் பின்னர் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக தெஹிவத்தை பகுதியில் இருந்து 30 இற்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் எமது கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டிருந்தனர் இதன்போது எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தற்பாதுகாப்பிற்காக திருப்பி தாக்கியதோடு தப்பியும் ஓடினார்கள்.

இதன்போது அவ்விடத்திற்கு வருகைதந்த மூதூர் பொலிஸார் தெஹிவத்தைப் பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரையும் கைது செய்யது சிறையில் அடைத்ததுடன் இரு தரப்பிலும் சிலரை தேடி வந்தார்கள். பின்னர் இரு தரப்பினரும் சமாதானமான முறையில் இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில் நேற்றைய தினம் பாலர்பாடசாலைக்குச் சென்று திரும்பி வரும் வழியில் மூதூர் பொலிஸார் எனது கணவரான லிங்கேஸ்வரன் என்பவரை ஓட்டோவில் அழைத்துச் சென்று எனது கணவரின் தலை, கை, கால் ஆகிய பகுதிகளை மிகவும் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர்.

அத்துடன் 30 பேருக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் எமது ஊருக்குள் வந்து தாக்குதல் மேற்கொண்டபோதும் வெறும் 4 பேரை மாத்திரம் கைது செய்து பிணையில் விடுவித்தும் ஏனையவர்களை கைது செய்யாமலும் ஒரு பக்கச்சார்பாக பொலிஸார் நடந்து கொள்கின்றனர்.

எனவே சட்டத்திற்கு முரனாண வகையிலும் அடிப்படை உரிமையை மீறும் வகையிலும் தாக்குதல் மேற்கொண்டதுடன், பக்கச்சார்பான முறையிலும் நடந்து வருகின்ற பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எனது கணவரின் தாக்குதல் சம்பவத்திற்கு நீதி வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கின் கைத்தொழிலை மேம்படுத்த நடவடிக்கை

## கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

வடக்கின்கைத்தொழிலைமேம்படுத்த விசேட நடவடிக்கை இதற்காகவே கள ஆய்வை மேற்கொள்ள அமைச்சர் குழு வருகை தந்ததாக கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

காங்கேசன் துறை தொழிற்சாலைக்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கையிலே அவர் இதனை தெரிவித்தார்.

வடக்குமாகாணத்தில்மூடப்பட்டுள்ள பாரிய கைத்தொழில் சாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பிலும் குறித்த பகுதிகளை கைத்தொழில் வலயமாக மாற்றுவதற்கான சாதக பாதக நிலமைகளை ஆராய்வதற்கும் அமைச்சர்குழுவினர் வருகைதந்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாரிய தொழிற்சாலைகளுக்கு முன் நின்று கருத்துக்களை கூறவேண்டிய நாம் இன்று காடுகளாக உள்ள கைவிடப்பட்டுள்ள தொழிற்சாலைக்கு முன் நின்று கருத்துகளை பகிரவேண்டியவர்களாகஇருக்கின்றோம்.

மீண்டும் இப்பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு கூடிய கவனம் எடுக்கவுள்ளோம்.

1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு எத்தகைய வியப்புடன் செயலாற்றிய கைக்தொழில்கள் இன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது .

இங்கு மட்டுமல்ல இலங்கையில் உள்ள அனைத்து தொழில் சாலைகளை மீள செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை முன்னேடுக்கவுள்ளோம். அவ்வாறு முன்னேடுக்கின்ற வகையில் வடக்கு மாகாணத்தின் கைத்தொழிலை மேம்படுத்தநடவடிக்கைஎடுத்துள்ளோம்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் முக்கியமாக காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலையை மீள அமைப்பதற்கு புனரமைப்பது தொடர்பில் ஆய்வுசெய்வதற்கு வந்துள்ளோம்.

எமது நாடு பல்வேறு பிரச்சினையால் இருப்பதால் எமது இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் இத்தகைய சூழலில் நாங்கள் இத்தகைய முயற்சிகளை செய்கின்றபோது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க முடியும் இதற்காக கள ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்காக இங்கு வந்துள்ளோம். - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெண் சமத்துவம்

இந்த உலகில் கொண்டாடப்படும் ஒவ்வொரு சிறப்பு தினத்திற்குப் பின்னாலும் ஒரு போராட்டம் இருக்கிறது. உலகப் பெண்கள் தினம் தோன்றியதும் கொண்டாட்டதில் அல்ல, போராட்டதில்தான். பெண்கள் தினத்துக்கும், அமெரிக்க தொழிற்சங்க இயக்கத்துக்கும், ரஷ்யப் புரட்சி இயக்கத்துக்கும் பங்கு உண்டு.

1975ஆம் ஆண்டுதான் பங்குனி 8 நாளை உலகப் பெண்கள் நாளாக ஐக்கிய நாடுகள் பேரவை அங்கீகரித்தது. ஆனால், ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்த நாள் பெண்களுக்கான முக்கிய நாளாக, உலகில் பல பகுதிகளில் இருந்து வருகிறது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1908ஆம் ஆண்டு பங்குனி 8 பெண்கள் மாபெரும் பேரணியை நடத்தினர்.

கூலியை உயர்த்தவும், வேலை நேரத்தை குறைக்கவும், வாக்களிக்கும் உரிமை கோரியும் சுமார் 15 ஆயிரம் உழைக்கும் பெண்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர். இந்த நாளை ஒரு வருடம் கழித்து தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது அமெரிக்க சோசலிஸ்ட் கட்சி. ஆனால், இந்த நாளை சர்வதேச தினமாக அனுசரிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் பெண்ணுரிமைப் போராளி கிளாரா ஜெட்கின்.

டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் 1910ஆம் ஆண்டு நடந்த உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் இந்த யோசனையை முன்வைத்தார் கிளாரா. அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்துகொண்டனர். அதையடுத்து 1911ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சிவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதை அடிப்படையாக கொண்டே 2011ம் ஆண்டு நூறாவது சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

1975ம் ஆண்டில் தான் ஐ.நா சபை பங்குனி 8ம் நாளை உலகப்பெண்கள்தினமாகமுறைப்படிஅறிவித்துகொண்டாடத் தொடங்கியது. அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடுவதற்கான நாளாக இந்த நாள் உருவெடுத்துள்ளது. ஆனால், பாலின பாகுபாட்டை எதிர்த்து உழைக்கும் பெண்கள் நடத்திய போராட்டங்கள், வேலை நிறுத்தங்காள்தான் இந்த நாளின் பின்னணியில் இருக்கின்றன.

முதலாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த போது 1917ம் ஆண்டு ரஷ்யாவில் போர் வேண்டாம். 'அமைதியும் ரொட்டியும்' தான் தேவை என்று வலியுறுத்தி பங்குனி 8 பெண்கள் போராட்டத்தை தொடங்கினர். நான்கு நாட்கள் நடந்த இந்த போராட்டம், உலக மகளிர் தினம் என்ற கருத்துக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது.

இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய மன்னரான ஜார், அரியணையைத் துறப்பதற்கும் காரணமாக அமைந்தது. மன்னராட்சி முடிவுக்கு வந்த நிலையில், அதற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தற்காலிக ஆளும்தரப்பு, பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. இந்த மாற்றம்தான், 1917ம் ஆண்டு நடந்த புகழ்பெற்ற ரஷ்ய புரட்சிக்கு காரணமாக அமைந்தது. அப்படி, புரட்சியின் பின்புலமாக இருந்த மகளிர் தினம், பெண்களின் பெருமை போற்றும் நாளாக இன்று உருவெடுத்துள்ளது.

2025–ம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தின் கருப்பொருள் 'அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு: உரிமைகள், சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் என்பதாகும். அனைவருக்கும் சம உரிமைகள், அதிகாரம் மற்றும் வாய்ப்புகளை அளிக்கவும் யாரும் விடுபடாத வகையில் அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்தையும் உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த ஆண்டின் கருப்பொருள் அழைப்பு விடுக்கிறது.

அரசியலிலும் பெண்களுக்கு சமபங்களித்து அவர்களை சமமாக நடத்துவோம் என்று அனைவரும் உறுதிபூணுவோம்.

# பாகப் பிரிவினை

என். சத்தியமூர்த்தி

நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து நாடு தழுவிய உள்ளூராட்சித் தேர்தல்கள் தமிழ் -சிங்கள புத்தாண்டை ஒட்டி அரங்கேற வாய்ப்புள்ளது என்று தென்னிலங்கை பத்திரிகைகள் மாத கணக்காக டமாரம் அடித்து வந்திருக்கிறார்கள். ஆனால், இதுவரை டமார செவிடாக இருந்து வந்த தமிழ் அரசியல் தலைமைகள், திடீரென்று உயிர்த்தெழுந்து தேர்தல் கூட்டணி குறித்தெல்லாம் பத்திரிகை செய்திகள் மூலம் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

இதேவேகத்தில் அவர்கள் இன்னமும் பயணித்தால், அவர்களுடைய கும்பகர்ண தூக்கம் முழுவதுமாக கலைந்து, அவர்கள் தொகுதி பங்கீடு போன்ற ஒரு முடிவிற்கு வருவதற்குள் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிப்பதற்கான காலகெடு முடிந்துவிடும் என்றே தோன்றுகிறது. அல்லது, முற்றுப்பெறாத, அல்லது அனைத்து தரப்பினருக்கும் திருப்தி தராத விதத்தில் ஒரு கூட்டணி தேர்தலை சந்திக்கும். அல்லது தனித்தனியாகவே அவர்கள் போட்டியிட்டு மீண்டும் தோல்வி அடைவார்கள்.

இங்கு பிரச்சினைக்கு முழு முதல் காரணம் இரண்டு விடயங்கள். ஒன்று, தமிழ் அரசு கட்சிக்குள் அரங்கேறி வந்த உள்குத்துகள், அதனைத் தொடர்ந்து தற்போதைய பாகப்பிரிவினை முன்னெடுப்புகள். மற்றது, கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் தயவில் உடனடியாக வரவிருக்கும் தேர்தல் பிரச்சினையை விட்டுவிட்டு அரசியல் தீர்வு குறித்து தமிழ் அரசு தவிர்த்த பிற தமிழ் கட்சிகள் தங்களது கவனத்தை சிதறடித்தது. தமிழ் அரசு அதனையும் செய்யவில்லை.

### பங்காளி சண்டை

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தது, தமிழ் அரசுக் கட்சியின் வட மாகாண முதல்வர் வேட்பாளராக சிறீதரனை முன்னிறுத்தி சுமந்திரன் செய்த அரசியல் உண்மை என்னவோ, சிறீதரன் முதல்வர் வேட்பாளராக களமிறங்கினால், அவருக்கு அடுத்தபடியாக கட்சியில் அதிக விருப்ப வாக்குகள் பெற்ற தான் நாடாளுமன்றதிற்கு செல்லும் வாய்ப்பு இருக்கிறது என்று மட்டுமே சுமந்திரன் கூறினார்.

முக்கியமாகத் தான் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல விரும்பவில்லை என்பதையும் அவர் மீண்டும் தெளிவு படுத்தினார். முன்னதாக நாடாளுமன்ற தேர்தல் முடிந்த கையோடு அவர் இதே நிலைபாட்டைத்தான் எடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்தே வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் அரசு சார்பாகப் போட்டியிட்டு தோல்வியுற்ற மருத்துவர் சத்தியலிங்கம் தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் சுமந்திரனின் விளக்கம் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

ஏதோ, தமிழ் அரசின் பதவிகள் அவருக்கும் சிறீதரனுக்கும் இடையேயான பங்காளி சண்டை என்பது போன்றும், அவர்கள் இருவரும் பேசி முடித்தாலே போதும், வேறு யாரையும் கலந்து ஆலோசிக்க வேண்டாம் என்பது போன்றும் ஒரு கருத்தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமை பொறுப்பு. தற்போது வட மாகாண முதல்வர் பொறுப்பு என்று இரண்டு முக்கிய பதவிகள் குறித்து பங்காளிகள் கூடிப்பேசினால் போதும் என்ற இமேஜ் தோன்றி உள்ளது. முன்னது, உள்கட்சி தேர்தல் முடிந்த கையோடு திருகோணமலை கட்சி நீதிமன்றத்தில் முடங்கி கிடக்கிறது. முதல்வர் பதவி குறித்து பேசுவதற்கோ சிறிது காலம் இருக்கிறது. இந்த நிலையில் கட்சியின் எந்தவொரு முக்கிய பதவிக்கும் பிறிதொருதலைவரோ தலைவர்களோ ஆசைபடக் கூடாது என்று சுமந்திரன் கருதுவது போன்ற ஒரு எண்ணம் பரப்பப்பட்டு வருகிறது.

தனது பங்கிற்கு, தான் வட மாகாண முதல்வர் பதவியைக் கோர போவதில்லை என்று சிறீதரன் அறிவித்துள்ளார். இதனால், அந்தப் பதவிக்கு சுமந்திரன் களமிறங்குவாரோ என்ற கேள்வியும் எழுகிறது. உண்மை என்னவோ, மாகாண முதலமைச்சர் பதவி என்பது, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தரப்பில் இருந்துகொண்டு ஆளும் தரப்பைக் கொக்கி போட்டு மடக்குவது போன்றது அல்ல.

மாறாக, அரச செயல்பாடுகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்த தெளிவான அறிவும் அனுபவமும் இருந்தால் மட்டுமே, அது மட்டுமல்ல. அரசு இயந்திரம் எவ்வாறு செயல்படும், அதனை எவ்வாறு செயல்படும் இயந்திரமாக மாற்றமுடியும் என்பதெல்லாம் தெரிந்த ஒருவராலேயே இது குறித்தெல்லாம் சிந்திக்க முடியும். அவ்வாறான செயலறிவும், சொல்லறிவும் இல்லாத காரணத்தினால்தான், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசராக பெருமை சேர்த்த விக்னேஸ்வரனால் வட மாகாண முதல்வராக ஜொலிக்க முடியவில்லை.

### கருதல், முன்கருதல்

எது எப்படியோ, தற்போது தமிழ் கட்சி தலைமைகளின் பிரச்சினையே

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மீனவர்களுக்காக...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல்களை எவ்வாறு கூட்டாகசந்திப்பது என்பதுதான். அது குறித்து தமிழ் அரசு கட்சியின் செயல் தலைவரான சிவஞானம் எழுதிய கடிதத்திற்கு, புளொட் தலைவர் சித்தார்தன் கடிதம் மூலமே பதில் அளிக்கிறார். அவரைத் தொடர்ந்து, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அதனையே செய்கிறார்.

சிவஞானம் அந்தகடிதத்தை எழுதும்போது, உள்ளாட்சி தேர்தல் திகதி குறித்த அதிகார அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை. என்றாலும், ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் அனைவரையும் ஓரிடத்தில் கூடி பேச அழைப்பு விடுப்பதற்கு அவர் ஏன் தயங்கினார் என்று தெரியவில்லை.

ஒன்று, தான் எடுத்த முன்னெடுப்புகள் அனைத்து கட்சி தொண்டர்களும் தமிழ் வாக்காளர்களும் அறிந்திருக்க வேண்டும் என்ற கருதல். அல்லது, தான் வாயால் சொன்னதை, தனது கடிதம் கிடைக்கப் பெற்றவர்கள் தவறாக புரிந்து கொள்வார்களோ என்ற முன்கருதல். எப்படியாயினும் இது ஒன்றும், அஜித்- - தேவயானி நடித்த 'காதல் கோட்டை' திரைப்படம் அல்ல, கடிதம் மூலமே காதல் செய்ய.

தற்போதைய சூழலில், தமிழ் அரசியல் தலைமைகள், மீண்டும் ஒரு முறை, 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற பழைய பல்லவியை பாடுவதற்கு மட்டுமே தயாராகி வருகிறார்கள் என்றே தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், இப்போதைய உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் எவ்வாறாயினும், அதனை தொடர்ந்தாவது, எதிர்பார்க்கப்படும் மாகாண சபை தேர்தல்களை குறி வைத்து அவர்கள் உடனடியாகவே பேச்சுக்களை தொடங்குவார்களா, என்பதை பார்க்க வேண்டும்.

## காய் நகர்த்தல்

அப்போது, இப்போது போல் இல்லாமல், சிவஞானம் முன்கூட்டியே இது போன்ற கடிதம் எழுதுவாரா, அதற்கான அதிகாரத்தை அவருக்கு தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு வழங்குவார்களா, என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இதில், குறிப்பாக வட மாகாண முதலமைச்சர் பதவிக்கு யார் யார் எல்லாம் குறி வைத்துக் காய் நகர்ந்த இருக்கிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும்.

தற்போதைய நிலையின்படி, தமிழ் அரசின் சிறீதரன் தவிர்த்து வேறு யாரும் முதல்வர் பதவி வேண்டாம் என்று கூறிவிடவில்லை. அவர்களில் எத்தனை பேர் வெளிப்படையாகத் தங்களது முன்முயற்சிக்கான காய் நகர்த்தலை உடனடியாகவே தொடங்கப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. இது தவிர, எத்தனை பேர், தங்களுக்கு பதிலாக வேறு ஒருவரை முன்னிறுத்தி அரசியல் செய்ய இருக்கிறாஜ ¯கள் என்பதும் தெரியவில்லை.

எது எப்படியோ, மற்ற எல்லா அரசியல் நகர்வுகளுக்கும் முன்னர், உள்ளாட்சி தேர்தல் குறித்த கருதல் அனைத்து கட்சியினருக்கும் இருக்கத்தான் செய்யும். மக்களால் தெரிவு செய்யப்படுகிறார்களோ இல்லையோ, தங்களை நம்பி அரசியல் செய்யும் தொண்டர்களை வேட்பாளர்களாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு கட்சித் தலைமைக்கும் உண்டு. அதற்கு உள்ளாட்சி தேர்தல்களே மிகப் பொருத்தமான களம். ஆனால், அதுவேதான், அனைத்துத் தமிழ் தரப்பினர் ஒருமித்து இந்த தேர்தல்களை சந்திப்பதற்கானவாய்ப்பைக்கெடுத்துவிடும்.

## பிளவின் விளைவு

ஆனால், தற்போதைய காய்நகர்த்தல் எல்லாமே வட மாகாணத்தை மட்டுமே குறிவைத்து முன்னெடுக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்திலும் தமிழ் வாக்காளர்களும் வேட்பாளர்களும் உள்ளனர். இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும், வட மாகாண அரசியலை முடித்துக் கொண்ட பின்னரே, மறந்துபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைகள், கிழக்கு மாகாணத்தை 'கொசுறு' போல நினைத்து ஆசன பங்கீட்டைச் செய்து கொள்வார்கள்.

ஆனால், இன்று தமிழர் அரசியலின் மானத்தை கிழக்கு மாகாணமே காப்பாற்றி உள்ளது. அதிலும் குறிப்பாக, தமிழ் அரசு கட்சி நாடாளுமன்றத்தில் எட்டு ஆசனங்களுடன் மூன்றாவது பெரிய கட்சியாக விளங்குகிறது என்றால், அதற்கு கிழக்கு மாகாணத்திற்கே நன்றி சொல்லவேண்டும்.

ஆனால், கட்சி தலைமைகளை பொறுத்தவரையில், தமிழர் அரசியல் என்றாலே, யாழ்பாணம் சார்ந்த வட மாகாண அரசியல் தான். வடக்கு மாகாண கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் மட்டுமே என்ற நிலைமையே இன்றளவும் தொடருகிறது. இந்தவொரு எண்ணவோட்டத்தினாலும்தான் கருணா-பிள்ளையான் தரப்பு, விடுதலை புலிகள் அமைப்பை பிளவுபடுத்தியது. அதன் விளைவுகளையும்தான் அந்த அமைப்பு பின்னர் சந்திக்க நேர்ந்தது.



# போதைவஸ்த்துக்களை அரசே மக்களிற்கு விநியோகிக்கும் மிகமோசமான நிலைமை

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு



போதை வஸ்த்துக்களை அரசே தனது சொந்த மக்களிற்கு விநியோகிக்கும் மிகமோசமான நிலைமை இந்த நாட்டில் நிலவுகின்றது. இந்த நிலைமையை இந்த அரசு தொடரக் கூடாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

போதைவஸ்த்து பாவனை என்பது நாடு முழுவதிலும் காணப்பட்டாலும் போருக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. இது போரிற்கு பின்னரான சமூகவிளைவாகவே நான் பார்க்கின்றேன். அந்த வகையில் இந்த போதைவஸ்து பிரச்சினையைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் நாட்டினுடைய சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும். சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் போதைவஸ்து பாவணையை கட்டுப்படுத்த முடியாது. தடுப்பதற்கான சட்டங்கள் இருந்த போதிலும் அதனை கடந்த காலங்களில் அரசாங்கங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதை மறுக்கமுடியாது.

போர் முடிவடைந்த பின்னர் குறிப்பாக 2010 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்விகற்கின்ற மாணவர்களுக்கு அரச இயந்திரத்தில் இருந்த படையினர் போதை வஸ்துக்களை விநியோகித்தார்கள் என்பது உண்மை. அதன் தொடர்ச்சியான நிலைமையை தற்போதைய அரசாங்கமும் தொடர்ந்து செய்யாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அந்த வகையிலே போதைவஸ்துக்களை அரசாங்கமே தனது மக்களிற்கு விநியோகிக்கும் நிலைமையை இந்த அரசு தொடரக்கூடாது என்பது எனது வேண்டுகோளாகும்.

ஆகவே இருக்கின்ற சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும். மதுப்பாவனைக்கான வயதுக்கட்டுப்பாடு கட்டாயமாக பின்பற்றப்படல் வேண்டும். எமது பிரதேசங்களில் மக்கள் தொகைக்கு மேலதிகமாக மதுபான நிலையங்கள் காணப்படுகின்றன. பொது இடங்களில் மதுபாவனை நடைபெறுகின்றது. சட்டவிரோத போதைப்பாவனையைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்ட அதிகாரம் பொலிஸாரிடம் இருக்கின்றது. அதனை அவர்கள் பயன்படுத்துகின்றார்களா என்றால் இல்லை. இதனை நான் பகிரங்கமாக சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

வடக்குமாகாணத்தின்5மாவட்டங்களிலும் மதுப்பாவனை போதைப்பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ புனர்வாழ்வு நிலையங்கள் எமது மாகாண சுகாதார அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி, கிளிநொச்சியில் தர்மபுரம், முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான், வவுனியாவில் பூவரசங்குளம், மன்னாரில் அடம்பன் ஆகிய இடங்களில் மருத்துவ புனர்வாழ்வு நிலையங்கள் காணப்படுகின்றன. எனினும் அவை சீராக இயங்குவதற்கான ஆளணிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே, சுகாதார அமைச்சர் அதற்கான தீர்வினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

100




# முக்கிய அறிவித்தல்



(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில், அண்மைக்காலமாக வீடுகள் உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் திருட்டு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றன.

குறிப்பாக ஒவ்வொரு ரமழான் மாதத்திலும் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருட்டுச்சம்பவங்கள்பெரும் பாலும் வீட்டு உரிமையாளர்கள் ரமழான் மாதத்தில் உறவினர்களின் வீடுகளுக்கு, ஆடை கடைகளுக்கு, இரவு வேளையில் இடம்பெறும் தராவீஹ் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் செல்லுவதால் மற்றும் வேறு தேவைகளுக்காக வீட்டை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களில் நடைபெறுகிறது.

எனவே, பொதுமக்கள் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் அவதானமாகவும், விழிப்புடனும் செயற்படுதல் அவசியமாகும். சந்தேகத்திற்குரிய வகையில் (குறிப்பாக இரவு வேளையில்) நடமாடுகின்றவர்கள் குறித்து சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு தகவல்களை வழங்குமாறு சம்மாந்துறை பொலிஸார் கேட்டுக் கொள்கின்றனர்.

இதேவேளை, வீட்டு ஜன்னல்களை உடைக்கும் குழுவினர் சம்மாந்துறை பிரதேசத்தில் நடமாடுவதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறப்பாக இடம்பெற்றது வவுனியா பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடல்

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் வியாழக்கிழமை வவுனியா பிரதேச செயலாளரும், கலாசார பேரவையின் தலைவருமான இ.பிரதாபன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, பிரதேச கலைஞர்களின் பாடல்கள், கூத்துக்கள், இசை முழக்கம், கவிதைகள், பட்டிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன், கலைஞர்களுக்கான அரசாங்க அடையாள அட்டையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100





## துறைமுக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்கூறியவாறு மூன்று நிறுவனங்கள் பயன்படுத்தும்மூன்றுஇறங்குதுறைகளையும் இலங்கைத் துறைமுக அதிகார சபையே நிர்வகித்தால் கூடுதல் வருவாயினை நாட்டுக்கு ஈட்ட முடியும் என்பதோடு வேலை வாய்ப்புகளையும் வழங்க முடியும்.

துறைமுகத்தை அண்டியுள்ள எண்ணெய்க் குதங்களில் பத்து வீதத்துக்கும் குறைவானவையே பயன்பாட்டில் உள்ளன. ஏனையவற்றையும்பயன்பாட்டுக்குகொண்டு வந்தால், இந்துமாகடலில்பயணம்செய்கின்ற கடற் கலங்களுக்கு எரிபொருள் வழங்கி பெருமளவு அந்நிய நாணய மாற்றினை ஈட்டுவதோடு வேலை வாய்ப்பினையும் வழங்கலாம்.

இலங்கைத்துறைமுகஅதிகாரசபையானது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் 5,226 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி வைத்துள்ளது உள்ளது. இதில் 1,882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றார்கள். எனவே துறைமுக அதிகார சபையிடம் இருந்து அதை விடுவித்து அதில் வாழும் மக்களுக்கு வழங்க வேண்டும்.

இ.போ. சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு 37 பஸ்கள் தேவை. எனினும் 20 பஸ்கள் மட்டுமே அதனிடம் உள்ளன. இதனால் இ. போ.சபையானது சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது. எனவே பழுதுபட்டு கிடக்கின்ற பஸ்களை திருத்த வேண்டும். குறைந்தது பத்து புதிய பஸ்களை திருகோணமலை மாவட்டத்துக்கு வழங்க வேண்டும்.

அத்தோடு இ. போ.சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் காணப்படும் 50 சதவீதமான ஆளணிப் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும்.மேலும் இ.போ.சபையின் திருகோணமலை மாவட்ட தரிப்பிட உள்ளக ஓடுதளம் மிக மோசமாக பழுதடைந்துள்ளது இதை மறுசீரமைக்க வேண்டும். திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு நேரடியாக புறப்படும்தொடருந்து சேவை அண்மையில் நிறுத்தப்பட்டு உள்ளது. இதனை மீள தொடங்க வேண்டும் என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியாகும். தொழில் செய்யும் நேரத்தைக் குறைத்தல், மிகச் சிறந்த ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி சுமார் 15,000 பெண்கள் நியூயோர்க் நகரில் நடத்திய பேரணியின் விளைவாக மார்ச் 08 சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக நம் நாட்டில் பல கலந்துரையாடல்களும் கருத்தாடல்களும் நடத்தப்பட்டிருந்தாலும், மேடைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அந்த கலந்துரையாடல்கள், பூமியில் ஒரு யதார்த்தமாக விதைக்கப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பைக் கட்டியெழுப்புவதில் இலங்கை பெண்களின் பங்களிப்பு மகத்தானது. அந்த மகத்தான பணிக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, கடந்த குறுகிய காலத்தில் இலங்கைப் பெண்களுக்கு பல வெற்றிகளை அடைய தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம் என்பதையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

பலதசாப்தங்களாக கலந்துரையாடலுக்கு மாத்திரம்மட்டுப்படுத்தப்பட்டிருந்த பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் வகிபாகத்தை அதிகரித்து, கடந்த பொதுத் தேர்தலில் இருபத்தி இரண்டு பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்நாட்டின் அரசியலில்ஒருதிருப்புமுனையாகஅமைந்தது என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல், ஆண்- பெண் சமூக சமத்துவத்திற்கான சமூக நீதியை அடைவதற்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்பொருளாதாரக்கொள்கையான உற்பத்திப் பொருளாதார செயல்பாட்டில், இந்நாட்டின் சனத்தொகையில் 51.7% ஆக இருக்கும் பெண்களை தீவிரமாகவும் செயற்திறனுடனும் ஈடுபடுத்தும் திட்டத்தை நாம் செயல்படுத்தியுள்ளோம்.

நீதியான சமூகம், சுதந்திரமான நாடு, சுதந்திரமான பெண்கள் என்ற அபிலாஷைகளை அடையும் வகையில் வீடு, போக்குவரத்து, சமூகம், தொழிலிடம் மற்றும் அரசியல் உட்பட அனைத்து இடங்களிலும் பெண்களுக்குஎதிரான அனைத்துவகையான வன்முறைகள் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் போன்ற பெண்களின் தனித்துவமான உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அரச கொள்கைகளைவகுப்பதற்குநாம்முன்னுரிமை அளித்துள்ளோம்.

இதற்கமைய,சகலபெண்கள்மற்றும்பெண் பிள்ளைகளுக்கும் சமத்துவம்,உரிமைகள் மற்றும்வலுவூட்டல்எனும்தொனிப்பொருளின் கீழ் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ‘அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்‘ என இந்த ஆண்டு மகளிர் தினத்தை ஏற்பாடு செய்வதிலுள்ள அர்த்தம் மற்றும் நடைமுறைச்சாத்தியம் என்பனவற்றை நினைவூட்ட வேண்டும்.

பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கும், நாட்டின் பெண்களுக்கு பாதுகாப்பான வாழ்வு மற்றும் நாகரிகமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கிய நமது பயணத்தில் முழுமையானபெண்கள்தலைமுறையினின் ஆதரவை எதிர்பார்த்து சர்வதேச மகளிர் தினத்திற்கு எனது மனார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# முன்னாள் பொலிஸ் மா அதிபரையே கைது செய்வதற்கு முடியாத பரிதாபம்

## ஆளும் தரப்பை எள்ளி நகையாடும் தொழிற்சங்க தலைவர்

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி மற்றும் கடந்த ஆளும்தரப்பில் இருந்த நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு எதிரான பண மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபரைக் கைது செய்ய முடியாத பரிதாப நிலையில் உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகைத்தந்திருந்த வைத்தியர் சமல் சஞ்சீவ, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவு:

முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் விடயத்தில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு பொதுமக்களிடையே பெரும் குழப்பத்தை விளைவித்துள்ளது. உயிர்த்தஞாயிறுகுண்டுத் தாக்குதல், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி, கடந்த ஆளும்தரப்பில் இருந்த நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு எதிரான பண மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபரைக் கைது செய்ய முடியாத பரிதாபநிலையில் உள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் என்பவர் இந்நாட்டின் சாதாரண பிரஜை ஒருவர் அல்லர். எனினும் ஆளும்தரப்பால் அவர் தொடர்பான தகவலை அறிந்துக் கொள்ளவோ அவரைக் கைதுசெய்வதற்கோ முடியாத நிலையில் உள்ளது.

மேலும் தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரும்போது கடவுச்சீட்டு, ஈ-விசா உள்ளிட்ட பல சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் நிலவிவந்தன. ஆயினும் ஆளும்கட்சியோ, எதிர்கட்சியோ அவை தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

ஆளும்தரப்பு வழமை போல குற்றவாளிகளை பாதுகாத்து ஆட்சிக்கு இடையூறு ஏற்படும்போது குற்றவாளிகளை ஒழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது. ஆகையால்நாளை(இன்று) குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னாள் பொலிஸ்மா அதிபரைகைதுசெய்வதில்ஏற்பட்டுள்ளதாமதம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு முறைபாடு ஒன்றை பதிவு செய்ய உள்ளோம். குறித்த முறைபாடு தற்போதைய பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட உள்ளது.

தேசபந்து தென்னகோனின் தலைமறைவு ஆளும்தரப்பின் நிலைப்பாடு, சட்ட ஒழுங்குமுறை மற்றும் இந்நாட்டு பாதுகாப்பு துறை மீதான சந்தேகத்தை வலுப்படுத்தும்வகையில்உள்ளது. ஆகையால் இவ்வாறான கெடுபிடியிலிருந்து தற்போதைய ஆளும்தரப்பைக் காப்பாற்றுவதற்காக, குறைந்தபட்சம் நீதிமன்றத்தில் வந்து முன்னிலையாகுமாறு முன்னாள் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் விடுத்துள்ள அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன்று சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் நாம் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் நிற்கிறோம். இது நாம் ஒன்றுபடுவதற்கான தருணம்

அது வெறுமனே நாம் அடைந்துள்ள முன்னேற்றங்களை கொண்டாடுவதற்கானது மட்டுமானதல்ல.ஆனால் அது இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள பெண்களது வாழ்வில் தாக்கம் செலுத்தக்கூடிய கட்டமைப்புசார் சமமின்மைக்கும் பெண்களுக்கு எதிரான கருத்துக்களுக்கும் முகங்கொடுப்பதற்கு ஒன்றுபட்டு இணைய வேண்டிய ஒரு காலமாகும்.

பாலின அடிப்படையிலான வன்முறை பொருளாதார கஷ்டங்கள் மற்றும் அரசியல் ஒதுக்கல்கள் ஆகியன பெண்களை பொருத்தமற்ற வகையில் பாதிக்கின்றன. குறிப்பாக கிராமிய சமூகங்கள் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தோட்டப்பகுதிகள் மற்றும் முறைசாரா தொழிற்றுறையைச்சேர்ந்தவர்கள் இவற்றுக்கு ஆளாகிறார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் பாதுகாப்பாக இருக்கும்வரை எந்தப் பெண்ணும் பாதுகாப்பாக இருக்க முடியாது. ஒருவரையொருவர் பாதுகாப்பதற்கும் எவரும் கைவிடப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கும் ஒவ்வொரு பெண்ணினதும் உரிமைகளும் பாதுகாப்பும் நிலைநிறுத்தப்படுவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

எமதுசனத்தொகையில்பெண்கள்52வீதம் உள்ளனர். மேலும் 1931 ஆம் ஆண்டு நாம் உலகளாவிய வாக்குரிமையைப் பெற்றோம். கடந்த தேர்தலில் பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க எமக்கு முடிந்தது.அந்த அடைவை நாம் கொண்டாடும் அதே வேளையில் அது இன்னும் மிகக் குறைவு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.நமது பிரஜைகளில் கணிசமான பகுதியினர் தலைமைத்துவம் மற்றும் முடிவெடுக்கும் செயற்பாட்டில் உள்வாங்கப்படாதிருக்கும்போது எமது ஜனநாயகம் முழுமையடையாது.இலங்கை பொருளாதாரமீட்சிகாலநிலைமாற்றம்டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் ஜனநாயக சவால்களை எதிர்கொண்டுவரும் ஒரு காலகட்டத்தில் எமது சனத்தொகையில் அரைவாசிப் பகுதியினரை நாம்தள்ளிவைக்கமுடியாது. இந்தசவால்களை வெற்றிகொள்வதற்கும் அனைவருக்கும் ஒரு தாங்குதிறன் கொண்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் பெண்களின் குரல்கள் தலைமைத்துவம் மற்றும் முகவராண்மை அவசியமாகும்.

பெண்ணிய இயக்கங்கள் நீண்ட காலமாக மாற்றம் சாத்தியம் என்பதை நமக்குக் கண்முன்னே காட்டியுள்ளன. ஆனால் நாம் தற்போதைய நிலையை சவாலுக்குட்படுத்தி முறையான மாற்றத்தைக் கோரும்போது மட்டுமே இது சாத்தியமாகும். இலங்கையின் பிரதமர் என்ற வகையில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் முகவராண்மையை மையமாகக் கொண்ட கொள்கைகளை முன்னெடுப்பதற்கான எனது உறுதியான அர்ப்பணிப்பை நான் மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். இந்த சர்வதேச பெண்கள் தினத்தில் வெறுமனே வார்த்தைகளில் மட்டுமன்றி பாலின உணர்வுள்ள கொள்கைகள் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் அனைத்து பெண்கள்மற்றும்விளிம்புநிலைசமூகங்களின் வாழ்வுஅனுபவங்கள்மூலம்உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதி பூணுவோம் என்றுள்ளது.

## கட்டுப்பணம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச் 3 ஆரம்பித்த கட்டுப்பணம் பெறும் செயல்முறையின்படி, மார்ச் 6 வியாழக்கிழமை மாலை 4.15 மணி வரை 88 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த 88 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக 10 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 38 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

## ஜப்பானுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வமாகப் பூர்த்திசெய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்எனத்தெரிவித்துள்ளது.

’கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கும், உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவில் அங்கம்வகிக்கும் நாடுகளுக்கும் இடையில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இலங்கைக்கும், அந்த உறுப்புநாடுகளுக்கும் இடையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அவைபரஸ்பரம்கைமாற்றம்செய்யப்படுவதே கடன்மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு இணக்கப்பாட்டின்நிறைவுசெயன்முறையாகும்’ எனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் இலங்கையின் அபிவிருத்தி மற்றும்மேம்பாடுஎன்பனஒட்டுமொத்தஇந்து-பசுபிக்பிராந்தியத்தினதும்ஸ்திரத்தன்மைக்கும், சுபீட்சத்துக்கும் இன்றியமையாதவையாகும் எனவும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

## சாதாரண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டைகள் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகளில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், மார்ச் 10 ஆம் திகிக்கு முன்னர் பரீட்சை திணைக்களத்தின் றறற.னழநநெவள.டழ வலைத்தளத்தின் மூலம் இணையவழியூடாக தெரியப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலை அதிபர்களும் மாணவர்களுக்கு அனுமதி அட்டைகளை விரைவில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறுபரீட்சைகள்ஆணையாளர்நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். இன்னும் அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் தங்கள் அதிபர்கள் ஊடாக பரீட்சை திணைக்களத்தை நாடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அனைத்து வகுப்புகள், விரிவுரைகள், பயிற்சி பட்டறைகள் உள்ளிட்டவை 11ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்தத் தடை அன்று முதல் பரீட்சைகள் வரை அமுலில்இருக்கும்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார். சூரியன் உதிப்பதற்கு முன்பே விழித்தெழும் அவர், நள்ளிரவு வரை தனது குடும்பத்திற்காகவும், நாட்டிற்காகவும் செய்யும் அந்த மகத்தான சேவையை விலைமதிப்பிட முடியாது.

எமது நாட்டின் முக்கிய உயிர்நாடியாக இருப்பது பெண்ணே. பாரம்பரிய வகிபாகங்களை மறந்து, அறிவால், திறமையால், நிபுணத்துவத்தால் நாட்டிற்கு சேவை செய்யும் அவர், நாட்டிற்கு டொலர் ஈட்டித்தரும் ஆடை தொழிற்சாலையில் இருந்து பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்முனைவோர் வரை ஆண்களுக்கு சளைக்காதபெரும்பங்களிப்பைவழங்குகிறார்.

நாட்டிற்காக, சமூகத்திற்காக, குடும்பத்திற்காக அவர் காட்டும் அந்த அசைக்க முடியாத தைரியத்திற்கு உரிய மதிப்பையும் இடத்தையும் வழங்குவது நம் அனைவரின் பொறுப்பும் கடமையுமாகும்.

இதன்போதுபெண்ணின்திறமைகளுக்கும் ஆற்றலுக்கும் தகுந்த இடமளித்து, வீட்டிலும், வெளியிலும், தொழில் புரியும் இடத்திலும் அவரைப் பாதுகாத்து, அவரது உரிமைகளை நிலைநிறுத்தி, நாட்டிற்குஅவர்ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்ற தேவையான வழிகளை திறந்துவிட வேண்டும்.

தலைமைப் பொறுப்பில் இருந்து கொள்கை வகுப்பு வரை மற்றும் அதற்கு அப்பாலும் பெண்களை வலுவூட்டுவது நம் அனைவரின் பொறுப்பாகும். 'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்..' என்ற தொனிப்பொருளுடன் இந்த ஆண்டு மகளிர் தினத்தைக் கொண்டாடும் நாம், இதை வெறும் வார்த்தைகளுக்கோ அல்லது தொனிப்பொருளுக்கோ மட்டுப்படுத்தாமல், வார்த்தையின் முழு அர்த்தத்தையும் நடைமுறைப்படுத்துவது நமது கடமையும் பொறுப்புமாகும்.

இந்த உயரிய பொறுப்பிற்காக எந்த நேரத்திலும் தேவையான பங்களிப்பையும் உந்து சக்தியையும்வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். வலுவூட்டப்பட்ட பெண்களால் நிறைந்த அழகான இலங்கைக்காக நாம் அனைவரும்ஒன்றிணைவோம்என்றுள்ளது

## ஞானசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உயிர்த்தஞாயிறுதினதாக்குதலின்பிரதான சூத்திரதாரி மற்றும் அதனுடன் தொடர்புடைய பலதகவல்கள்தாம்அறிந்திருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்திருக்கிறார்.எவ்வாறாயினும் தற்போதைய அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியாயமான விசாரணைகளை முன்னெடுக்கும் என உறுதியளித்துள்ளது.

இந்நிலையில் தேரரின் இந்த அறிவிப்பு தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாக அமையும்.அத்துடன் அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது.எனவே அரசாங்கம் அவருக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும்.

ஏற்கனவே அவர் இந்த தாக்குதல் இடம் பெறுவதற்கு முன்னரும் நாட்டில் அசம்பாவிதமொன்று இடம்பெறவுள்ளதாக எச்சரித்திருந்தார்.தற்போது அவர் இந்த விசேட அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள தலதா கண்காட்சியின் போது உயர் பாதுகாப்பை வழங்குமாறு கூறியுள்ளார். நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேபோன்று தற்போது மக்களுக்கு தேவையான சேவையை முன்னெடுத்துள்ள இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. எனவே இந்த அரசாங்கத்துக்கு எதிராக பயங்கரவாத அமைப்புகளின்அச்சுறுத்தல்காணப்படுமாயின் அது இந்த நாட்டில் மீண்டும் பாரிய நெருக்கடியை தோற்றுவிக்கும். அரசாங்கம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தேரரை அழைத்துஅவரிடம் வாக்குமூலம்பெற வேண்டும்.அவரிடமிருந்து கிடைக்கப்பெறும்தகவல்களைகொண்டுஉரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு பிணை

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியலை நீடிக்க காரணங்கள் போதாமையால் பிணை வழங்கலாம் என வவுனியா மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ.ஆர்டி சில்வா ஆஜராகி, சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு சமர்ப்பித்தார்.

அதனை மறுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளால், பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹறால் சட்டமா அதிபர் திணைக்களத்தால் பிணை மறுப்புக்கு விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கலாம் என உத்தரவிட்டார். 100

# சம்பளம் வழங்கக்கோரி புல்மோட்டை இல்மனைட் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(றிஸ்னாத்)

கடந்த அரசாங்கத்தால் புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலை ஊழியர்களாக 83 பேர் நியமிக்கப்பட்டனர். எனவே இவ் ஊழியர்கள் தங்களது 9 மாத சம்பளம் கிடைக்கபெறாமையால் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்த ஊழியர்கள் கடந்த 9 மாதங்களாக சம்பளமற்ற வேலை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஊழியர்களால் தனது குடும்ப வாழ்வாதாரத்தையும், பிள்ளைகளின் எதிர்காலத்தையும், தனது குடும்ப வறுமைக்கும் தீர்வு வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தங்களுடைய சம்பளத்தை அரசாங்கம் வழங்கும் வரை இந்த ஆர்ப்பாட்டம் தொடரும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.






# பரிசளிப்பு

(ஹலால்தீன்)

கிண்ணியா நகர சபையும் கிண்ணியா பொது நூலகமும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 2024 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இடம்பெற்றது.

இப்பரிசளிப்பு விழா கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடை பெற்றது.

கிண்ணியா நகர சபை செயலாளர் எம் கே எம் அனிஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிண்ணியா நூலகப் பொறுப்பாளர் முஹம்மது மசூத், வாசக வட்ட உறுப்பினர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கவிதை, பட்டிமன்றம், வினா விடை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வடக்குக் கிழக்கு மக்களுக்கு இன்றுவரை நீதி கிட்டவில்லை

## அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவிப்பு



வடக்கு கிழக்கு மக்களுக்கு அன்று முதல் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. தற்போது புதிதாகவந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காகவும் உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்காகவும் நாங்கள் தொடர்ந்து போராட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர் அருட்தந்தை ஜீவநந்த பீரிஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்காவரையும் நேற்று (வியாழக்கிழமை) நீதிக்கான நடை பயணத்தின் 1030 ஆவது நாள் போராட்டத்தில் மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர்கள் பௌத்த தேரர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

காலிமுகத்திடல் அரகலைய போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் நீதிக்கான பயணம் தொடர்ந்து 1030 ஆவது நாளாக இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் வடக்கு கிழக்கில் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி அவர்களுக்கான இடங்கள் அன்று முதல் இன்றுவரை கிடைக்கப்படவில்லை அனைத்து மக்களையும் விட அதிகமாக வடகிழக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளவேண்டும்.

எனவே அந்த மக்களின் நோக்கத்தை கூட தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே, அந்த மக்களின் நோக்கத்துக்காக மக்கள் பேரவைக்கான இயக்கமாகிய நாங்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து பேராடிவருகின்றோம். அதை வலியுறுத்துவதற்காக இந்த தொடர்ச்சியான நடைபாதை போராட்டங்கள் கோரிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அசாதாரண நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காக உண்மையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக மக்களாகிய நாங்கள் ஒன்றுபடவேண்டும். - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாண பகுதிகளில் ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல்

## பல பன்றிகள் இறப்பு



கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பாகங்களிலும் வேகமாகப் பரவி பன்றி வளர்ப்புப் பண்ணைகளில் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி - பளைமற்றும்யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேசங்களில்அமைந்திருந்த 5 பன்றிப்பண்ணைகளிலும் பரவி பன்றிகளுக்கு பல இறப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரதிணைக்களமாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

மேற்படி ஐந்து பண்ணைகளிலும் பன்றிகளின் குருதிமாதிரிகள் பெறப்பட்டு பேராதனை மிருகவியல் ஆராய்ச்சி நிலையத்தால் நோய் உறுதிப்படுத்தப் பட்டமையை தொடர்ந்து இப்பண்ணைகளை உடனடியாக மூடி பண்ணையின் சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கான நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு இப்பண்ணைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கடந்த மூன்றுதினங்களுள் மூடப்பட்டுள்ளன.

ஆபிரிக்க பன்றிக்காய்சலானது மனிதரில் நோயை ஏற்படுத்தாத போதும் பன்றிகளில் மிக வேகமாகப் பரவி அவற்றில் பல இழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நோயாகும். நோயுற்ற பன்றிகளின் நேரடி தொடுகை மூலமாக மட்டுமன்றி மனித உடல், உடை மற்றும் வாகனங்கள் ஊடாகவும் வேறு பண்ணைகளில் நோய் பரவும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் நோய்தொற்று கண்டறியப்பட்ட சகல பண்ணைகளையும் தற்காலிகமாக மூடி பண்ணை நடவடிக்கைகளை முடக்கி வைப்பதற்கு திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரிச்ரொக் பதிவுகளை இட்டு முரண்பட்ட நபர் மறியலில்

யாழ்ப்பாணத்தில்சமூகவலைத்தளத்தில்நேரலைகாணொளிகளைப் பதிவிட்டு , பல்வேறு தரப்பினருடனும் முரண்பாட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

புலம்பெயர் நாடொன்றிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சந்தேக நபர் ஒருவர் ரிக் ரொக் தளத்தில் நேரலை காணொளிகளைப் பதிவிட்டு பல்வேறு தரப்பினருடனும் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேக நபர் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் , வரணி பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு சென்று , வெளிநாட்டு பணத்தை உள்ளூர் பெறுமதிக்கு மாற்ற வங்கியில் கால தாமதம் ஏற்பட்டதாக நேரலையில் காணொளி பதிவிட்டு, வங்கியின் முகாமையாளர் , உத்தியோகஸ்தர்கள் , பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

அதேபோன்று சந்தேக நபர் சில வாரங்களுக்கு முன்னர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினுள் சென்று , பொலிஸார் முறைப்பாடுகளை பதிய கால தாமதம் செய்வதாக நேரலை காணொளிகளைப் பதிவிட்டு பொலிஸாருடனும் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரம் வரணி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் இல்ல மெய்வல்லுனர் போட்டி ஒன்றுக்குச் சென்று , மாணவிகளின் அனுமதியின்றி , ரிக் ரொக் தளத்தில் நேரலை காணொளிகளைப் பதிவிட்ட போது , பாடசாலையில் கடமையில் நின்ற பொலிஸார், அதிபரின் அனுமதியின்றி மாணவிகளைக் காணொளி எடுக்க முடியாது என அறிவுறுத்திய போது , பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் முரண்பாட்டில் ஈடுபட்டு , அவற்றினையும் காணொளிகளாக பதிவிட்டுள்ளார்.

குறித்த காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து , பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் சந்தேக நபர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

# நெடுந்தீவில் பாடசாலைகளின் நேரத்தை மாற்றுவதற்கு ஆய்வு

நெடுந்தீவுக்கான படகு சேவைகளின் நேரத்தை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்றவாறு பாடசாலை நேரத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் புதன்கிழமை மக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் நெடுந்தீவில் பாடசாலைகளுக்கான ஆசிரிய பற்றாக்குறை தொடர்பிலும், அவற்றினை நிவர்த்தி செய்வது தொடர்பில்புதிய ஆசிரியநியமனம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அதன்போது, படகுச்சேவையின் நேரத்தை கருத்தில் கொண்டு நெடுந்தீவிலுள்ள பாடசாலைகளை ஆரம்பிக்கும் நேரத்தை மாற்றியமைப்பது தொடர்பில் ஆராய்வதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் 16 பேர் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பேரவை உறுப்பினர்களாக 16 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்னவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த05ஆம்திகதிமுதல்அடுத்துவரும்மூன்றாண்டுகளுக்குச் செயற்படும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:

பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ் (ஓய்வு பெற்ற சமூகவியல் பேராசிரியர்), இ.பத்மநாதன் (முன்னாள் பிரதம செயலாளர் நிதி), ஏந்திரி எஸ்.வினோதினி (பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்), ஏந்திரி. ஏ.சுபாகரன் (திட்டப்பணிப்பாளர், ஏசியா பவுண்டேசன்), வைத்திய நிபுணர் என். சரவணபவ (மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் நிபுணர்), ஷெரீன் அபதுல் சரூர் ( எழுத்தாளரும், பெண் உரிமைச் செயற்பாட்டாளர்), கலாநிதி எம். அல்பிரட் (முன்னாள் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம்), ஏந்திரி அ. குணாளதாஸ் (பட்டயப் பொறியியலாளர்), என். செல்வகுமாரன் (முன்னாள் பீடாதிபதி, சட்டபீடம், கொழும்பு), வனஜா செல்வரட்ணம் (பணிப்பாளர், வட மாகாண தொழிற்றுறை திணைக்களம்), டி. கே.பி.யூ. குணதிலக (முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை), எம். ஜே. ஆர். புவிராஜ் ( முன்னாள் பணிப்பாளர், திறைசேரி), பேராசிரியர் சி.சிவயோகநாதன் ( வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்), பி. ஏ. சரத்சந்திர ( முன்னாள் அரச அதிபர், வவுனியா), க.பிரபாகரன் (சட்டத்தரணி), ஏ.எம்.பி.என். அபேசிங்க (மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், வடமத்திய மாகாணம்.)

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஓர் உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும்.

பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியுடன், பால்நிலை சமத்துவம், சமய ரீதியான பிரதிநிதித்துவத்துடன், சமூக நலன் சார்ந்த உயர் சிந்தனையுடைய நபர்களையே வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கலாம் எனபல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால்வரையறுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# பனைசார் தொழிலாளர் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பனை அபிவிருத்திச்சபை பணிப்பாளர் சபை முயற்சி

## பேராசிரியர் பகீரதன் தெரிவிப்பு

(சுபேசன்)

பனைசார் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பனை அபிவிருத்திச்சபையினுடைய புதிய பணிப்பாளர்சபை என்றும் அயராது உழைக்கும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்விவசாயபீடபீடாதிபதியும்-வியாபார இணைப்பு அலகின் பணிப்பாளருமான பேராசிரியர் கந்தையா பகீரதன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச்சபையின் ஆறு பேர் அடங்கிய புதிய பணிப்பாளர்சபை உறுப்பினர்களில் ஒருவராக பேராசிரியர் பகீரதன் நியமிக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

பனை அபிவிருத்திச்சபையை அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற நிறுவனமாக மாற்றவும் -சபைக்கு கீழே இயங்கும் இதர நிறுவனங்களின் வியாபாரத்தை அதிகரிக்கவும் - பனை அபிவிருத்திச்சபையை மேலும் ஒருபடி மேலே கொண்டு செல்லவும் பணிப்பாளர்சபை உறுப்பினர்களில் ஒருவர் என்ற வகையில் எனது ஒத்துழைப்பை வழங்குவேன்.



பனைசார் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

புதிய பணிப்பாளர்சபை பனைசார் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லும்.

பனை அபிவிருத்திச்சபையின் கீழே உள்ள வடிசாலைகளை மீள இயங்கி தொழிலாளர்களுடைய தொழிலைப் பாதுகாப்போம்.

பனை அபிவிருத்திச்சபையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க அதன் தலைவருக்கு உறுதுணையாக இருந்து சபையின் கீழ் பணிபுரியும் ஊழியர்களை வினைத்திறனான பணியாளர்களாக மாற்றுவதற்கும் என்னால் முடிந்தவரையான ஆலோசனைகளை வழங்குவேன்.

அத்துடன் துறைசார் நிபுணர் என்ற வகையில் பனை அபிவிருத்திச்சபைக்கு வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து பனைசார் பொருளாதாரத்தை பாதுகாப்பதில் எனது பங்களிப்பு காணப்படும்.

துறைசார் நிபுணராக என்னை அடையாளம் கண்டு பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமித்த பெருந்தோட்ட அமைச்சருக்கு நன்றிகள். மேலும் அமைச்சரவை அமைச்சரான சந்திரசேகர் தொழிலாளர்களுடைய நலன் சார்ந்து எடுக்கின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு எனது பங்களிப்பு இருக்கும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# வேலணை – வங்களாவடி பிரதேச வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையை உடன் நிவர்த்திசெய்யவும்

## பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் வேண்டுகோள்

(சுபேசன்)

வேலணை-வங்களாவடி பிரதேச வைத்தியசாலையில் நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலணைப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் - யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினருமான திருமதி ஜெ.அனுசியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில், அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான வைத்தியசாலையாக மேற்படி வைத்தியசாலை காணப்படுகின்ற போதிலும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியசேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றன.

கடந்த அரசாங்க காலத்தில் இந்த வைத்தியசாலை பிதரத்திற்குதரமுயற்துப்பட்டுள்ள போதிலும் அதற்கான ஆளணி வளங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எவையுமே இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இரண்டு வைத்தியர்களே இங்கு நிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் அங்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றனர். தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையும் நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

வருடம் ஒன்றிற்கு சுமார் 25,000 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்களும், 1500 இற்கும் மேற்பட்டோர் விடுதிகளில் தங்கியும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் உடனடியாக உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனமெடுத்து ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.



# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்

வருடாந்த கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவையொட்டி இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் வியாழக்கிழமை மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், எதிர்வரும் மார்ச் மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு கடற்படையினரின் ஒத்துழைப்பு அவசியமானது என குறிப்பிட்டதுடன், பங்களிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் கடந்த கூட்ட விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தரும் பக்தர்கள் 9,000 பேர்வரை கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லுகின்ற பயணிகளுடைய பதிவுகள் குறிகாட்டுவானில் மேற்கொள்ளபடுமெனவும் ஏனைய பிரதேசங்களிலிருந்து செல்லுகின்றவர்கள் கடற்பாதுகாப்பு கருதி தங்களுடைய பிரதேசங்களில் உள்ள கடற்படை முகாம்களில் தங்களுக்குரிய பங்குகளிலும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு படகுச் சேவைக்கான ஒருவழிக்கட்டணமாக ரூபா 1,300 ரூபா அறவிடுவது எனவும், நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கான ஒரு வழிக்கட்டணமாக 1,000 ரூபா அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இம்முறை சாரணர்கள் 25 பேர்வரை இத்திருவிழாவில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கடற் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ள படகுகள் சேவை மற்றும்



அவை புறப்படும் நேரங்கள் தொடர்பாக கடற்படை அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

யாத்திரிகர்களுக்கு 14 ஆம் திகதி இரவு உணவும், 15 ஆம் திகதி காலை உணவும் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அவர்களுக்கான தங்குமிட வசதிகள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசல கூட வசதிகள், குடிநீர் தேவைகள், பாதுகாப்பு, ஒலி, ஒளி வசதிகள், கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், ஆலயச்சூழல் துப்புரவு செய்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம், தொலைத்தொடர்பு வலையமைப்பு வசதிகள் ஊடகங்களுக்கான அனுமதி தொடர்பான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஆயர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஜெபரட்ணம், மேலதிக அரசாங்க



அதிபர் (காணி), வட மாகாணப் பிரதி கடற்படை கட்டளைத் தளபதி, மாவட்ட பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப்பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் (நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை), கடற்படை அதிகாரிகள், பிரதேச சபை பிரதிநிதி , யாழ்ப்பாண சாரணர் பிரதிநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன் விழாவுக்கு ஏற்பாடு

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன்விழாவை இவ்வாண்டு கொண்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இளையோர் மத்தியில் அடிகளாரின் பல்துறைசார் பணிகளை அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண மறைமாவட்டம், யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம், யாழ். அமலமரித்தியாகிகள்மாகாணம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இவ்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதன் தொடக்க நிகழ்வானது இம்மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் கலாசாரப் பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம்பிக்கப்பட்டு புனித திரேசாள் பாடசாலையில் அரங்க நிகழ்வுகளுடன் நிறைவடையவுள்ளன.

முப்பொன் விழாவின் தொடர் செயற்பாடுகளாக பாடசாலைமட்டத்தில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்றும் ஆய்வரங்கம் ,ஆய்வுநூல் வெளியீடு, மலர் வெளியீடு, நிறைவு விழா போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளுக்குப் பொறுப்பாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார், அருட்பணி. சூ. யே. ஜீவரட்ணம், அமதி, மற்றும் அருட்தந்தை டியுக் வின்சன், அருட்பணி. அ. றொக்சன் ஆகியோர் செயற்படவுள்ளார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப்பணி, வரலாற்றுப்பணி, சமூகப்பணி, மொழிப்பணி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான பொறுப்புக்களை பேராசிரியர் தி. வேல்நம்பி, பேராசிரியர் அருட்பணி. ஞா. பிலேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் திருமதி சுபதினி றமேஸ் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் முப்பொன்விழாக்குழுவின் இணைத்தலைவர்களாக அருட்பணி. ம. ஜெறோசெல்வநாயகம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோரும் இணைச் செயலர்களாக அருட்பணி. செ. அன்புராசா அமதி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரும் பொருளாளராக அருட்பணி. அ. பி. ஜெயசேகரம் அடிகளாரும் செயற்படவுள்ளார்கள்.

ஜூன், ஜூலை மாதங்களில் பாடசாலை மட்டப் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஆய்வரங்கும், செப்ரெம்பர் மாதமளவில் நிறைவுவிழா அரங்க நிகழ்வுகள் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கும் நடைபெறவுள்ளன.

# கிழக்கு ரயில் மார்க்கங்களில் வருகின்றது புதிய நடைமுறை

அரசாங்கத்தால் கிழக்கு ரயில் மார்க்கங்களில் வெள்ளிக்கிழமை முதல் காட்டு யானைகளின் உயிரிழப்பைத் தவிர்ப்பதற்காக ரயில் சேவையில் புதிய நடைமுறைகள் முன்னெடுப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இதற்கு பெரும் பங்களிப்பு செய்து வரும் காட்டு யானைகளின் வளத்தை பாதுகாப்பதுக்காக வெள்ளிக்கிழமை முதல் ரயில்வே திணைக்களத்தால் கிழக்கு மாகாணத்திற்கான புதிய ரயில் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுத்தியுள்ளது.

இதற்கு அமைய வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பில் இருந்து பாடுமீன் கடுகதி ரயில் 6:15 இற்கு புறப்பட்டு கொழும்பை பிற்பகல் 3:30 இற்கு சென்றடையும்.

மட்டக்களப்பில் இருந்து புலத்தசி ரயில் சேவை நள்ளிரவு 1.30 புறப்பட்டு கொழும்பை மறுநாள் காலை 10 மணியளவில் சென்றடையும்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கான புலத்தசி பிற்பகல் 3:15 இற்கு புறப்பட்டு நள்ளிரவு 12 மணியளவில் மட்டக்களப்பை வந்தடையும்.

இதுவரை காலமும் 7 மணிக்கு புறப்பட்ட மட்டக்களப்புக்கான பாடுமீன் கடுகதி ரயில் இன்றிலிருந்து இரவு 11 மணிக்கு புறப்பட்டு அடுத்த நாள் காலை 8:30 அளவில் மட்டக்களப்பை வந்தடையும்.

ஏனைய இணைப்பு சேவைகளில் எது வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. எனவே ரயில் பயணிக்கும் பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு செயல்படுமாறு ரயில் திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கில் என்ஜியோகிராம் பரிசோதனை வசதியில்லை: மட்டு. வைத்தியசாலையில் இந்த வசதியை ஏற்படுத்துக!

## சபையில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி கோரிக்கை..!

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் என்ஜியோகிராம் பரிசோதனை மேற்கொள்ள ஒரு வைத்தியசாலையில் கூட அந்த வசதி இல்லை. யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே செல்லவேண்டி இருக்கின்றது. அதனால் இது தொடர்பில் கவனம் செலுத்தி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இந்த வசதியை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவருஜ"ளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்,

நாடாளுமன்றத்தில்வியாழக்கிழமைஇடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் அதிகமாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அதுதொடர்பான பரிசோதனை செய்வதற்கு கிழக்கு மாகாணத்தில் அரச வைத்தியசாலைகள் எதிலும் அந்த வசதிகள் இல்லை. கிழக்கில் இருக்கும் மிகப்பெரிய வைத்தியசாலையான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கூட அந்த வசதி இல்லை. கிழக்கு மாகாணத்தில் இருக்கும் இருதய நோயாளர்கள் இந்த பரிசோதனையை மேற்கொள்ள யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர். இதனால் யாழ்ப்பாண வைத்தியசாலை ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு இருதய நோயாளர்களுக்கும் இந்த பரிசோதனையை மேற்கொள்ள இருப்பதால் ஒரு மாதத்துக்கு 8 பேருக்கே அவர்கள் பரிசோதனைக்கு அனுமதி வழங்குகிறார்கள்.

இதன்காரணமாக ஆயிரக்கணக்கான நோயாளர்கள் ஒன்றரை அல்லது இரண்டுவருடங்கள் வரை காத்திருக்க வேண்டி இருக்கின்றனர். அதற்கிடையில் நூற்க்கணக்கான நோயாளர்கள் மரணித்துவிடுகின்றனர். அதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் என்ஜியோகிராம் பரிசோதனையை மேற்கொள்ள முடியுமான வசதியை செய்துகொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.



# வாழைச்சேனைப் பகுதியில் வாகன விபத்து; ஒருவர் சாவு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக வியாழக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணையடியைச் சேர்ந்த 41வயதுடைய கோறளைப்பற்று பிரதேச சபையில் காவலாளியாக கடமையாற்றும் ஊழியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் முன்னே சென்ற ஓட்டோவை முந்தி செல்ல முற்பட்ட வேளை வேகட்டுப்பாட்டை இழந்து ஓட்டோ மோதுண்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

இதன்போது அருகில் இருந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த போதிலும் தலைப் பகுதியில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக அதிகளவு இரத்தப்போக்கினால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மெற்கொண்டுள்ளனர்.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2025இல் வெளியிடப்பெற்றது